RNI-N0: TNTAM/2021/83936




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 29 | பிப்ரவரி.5 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# ராகுல் கேள்விகளுக்கு பாஜக அஞ்சுவது ஏன்?.. : முதல்வர் ஸ்டாலின் கேள்வி

சென்னை: பிப்.5-

"ராகுல் காந்தி எழுப்பும் கேள்விகளைக் கண்டு ஒன்றிய பாஜக அரசு ஏன் அஞ்சுகிறது?" என முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில்,"மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் எனது சகோதரருமான ராகுல் காந்தி எழுப்பும் கேள்விகளைக் கண்டு ஒன்றிய பாஜக அரசு ஏன் அஞ்சுகிறது?. அவை உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவும், நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்கள் குறித்து அவைக்குத் தெளிவுபடுத்தவும் அரசு முன்வர வேண்டும்.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 8 நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநீக்கம் செய்துள்ளதற்கு எனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உடனடியாக அவர்களது இடைநீக்கத்தைத் திரும்பப்பெற்று, முக்கியத்துவம் வாய்ந்த நாட்டின் பிரச்சினைகள் குறித்து அவர்கள் அவையில் பேசுவதற்கான ஜனநாயக உரிமை காக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



எம்.பி.க்கள் இடைநீக்கம் ஏன்? நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்று உறுப்பினர்கள் பேசி வருகின்றனர். இந்நிலையில், நேற்று முன்தினம் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசினார்.

அப்போது, 2020ம் ஆண்டு இந்தியாசீனா இடையே ஏற்பட்ட மோதல் குறித்து, முன்னாள் ராணுவத் தளபதி எம்.எம். நரவனேவின் நினைவுக் குறிப்பின் அடிப்படையில் எழுதப்பட்டு வெளியிடப்படாத புத்தகத்தை மேற்கோள் காட்டி ராகுல் காந்தி பேச முயன்றார். அப்போது, ராகுல் காந்தி அவையைத் தவறாக வழிநடத்துவதாகக் கூறி, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் பாஜக உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து, ஆதாரம் இல்லாமல் பேசக் கூடாது. விவாதத்துக்காகப் பட்டியலிடப்பட்ட தலைப்பில் இந்தியாவோ அல்லது சீனாவோ இடம்பெறவில்லை, எனவே, கொடுக்கப்பட்டுள்ள தலைப்பின் கீழ் பேசும்படி மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா அறிவுறுத்தினார். அதைக் கேட்காமல் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், மக்களவை நேற்று கூடியதும், ராகுல் காந்தியை பேச அனுமதிக்காததற்கு கண்டனம் தெரிவித்து காங்கிரஸ் உள்ளிட்ட இண்டியா கூட்டணி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர். அவைத் தலைவரின் இருக்கை அருகில் சென்று மத்திய அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர். அவர்கள் காகிதங்களை கிழித்து வீசியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து, மக்களவையில் அத்துமீறி நடந்து கொண்ட காரணத்துக்காக 374வது பிரிவின் கீழ் இந்த அமர்வில் இருந்து 8 எம்.பி.க்களை இடைநீக்கம் செய்ய நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர் கிரண் ரிஜிஜு தீர்மானம் கொண்டு வந்தார்.

குரல் வாக்கெடுப்பு மூலம் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப் பட்டதையடுத்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஹிபி ஈடன், அமரீந்தர் சிங் ராஜா வார்ரிங், தமிழக எம்.பி.க்கள் மாணிக்கம் தாகூர், சு.வெங்கடேசன் மற்றும் குர்ஜித் சிங் அவுஜ்லா, கிரண் குமார் ரெட்டி, பிரசாந்த் படோல், டீன் குரியகோஸ் உள்ளிட்ட 8 பேர் சஸ்பெண்ட் செய்யப்படுவதாக அவையில் அறிவிக்கப்பட்டது.

## நகை திருட்டு புகாரில் உண்மை இல்லை; இது காவல் மரணமே அஜித்குமார் வழக்கில் சிபிஐ அறிக்கை

மதுரை: பிப்.5-

'மடப்புரம் பத்ரகாளி அம்மன் கோயில் காவலாளி அஜித்குமார் வழக்கில், நகை திருட்டுப் புகாரில் உண்மை இல்லை. அஜித்குமாரின் மரணம் என்பது காவல் மரணமே என உறுதியாகியுள்ளது' என்று உயர் நீதிமன்ற மதுரை கிளையில் சிபிஐ அறிக்கை தாக்கல் செய்துள்ளது.





திருப்புவனம் மடப்புரம் பத்ரகாளி அம்மன் கோயில் காவலாளியாக பணி புரிந்தவர் அஜித்குமார். இவரை கடந்த ஆண்டு ஜூன் 27ம் தேதி நகை காணாமல் போனது தொடர்பாக நிகிதா என்பவர் அளித்த புகாரின் அடிப்படையில் தனிப்படை காவலர்கள் விசாரித்தனர். அதில் கடுமையாக தாக்கப்பட்ட அஜித்குமார் ஜூன் 28ம் தேதி உயிரிழந்தார்.

இந்த கொலை வழக்கில் 5 தனிப்படை காவலர்களான கண்ணன், ராஜா, ஆனந்த், பிரபு, சங்கர மணிகண்டன் ஆகிய 5 பேர் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதனிடையே அஜித்குமார் கொலை வழக்கு சிபிஐ விசாரணைக்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள காவலர்கள் 5 பேர் ஜாமீன் வழங்கக் கோரி மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனு நீதிபதி எஸ்.ஸ்ரீமதி முன்பாக இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, சிபிஐ தரப்பில், 2 பதில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மேலும், சிபிஐ தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வாதத்தில், "அஜித்குமாரின் மரணம் ஒரு காவல் மரணம் என்பது உறுதியாகியுள்ளது. டிஎஸ்பி, காவல் ஆய்வாளர், தலைமை காவலர், தனிப்படை காவலர்கள் என 10 பேருக்குமே இதில் தொடர்புள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டது.

அப்போது, குறிக்கிட்ட நீதிபதி, நகை திருட்டுப் புகார் என்ன ஆனது? என கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த சிபிஐ தரப்பு வழக்கறிஞர், "அது உண்மை இல்லை என்பதால், புகார் முடிக்கப்பட்டு விட்டது. அது தொடர்பான அறிக்கை தயாராகி வருகிறது. விரைவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து நீதிபதி, "ஒன்றுமே இல்லாத வழக்கிற்கு ஒருவரை அடித்து கொலை செய்துவிட்டனர். புகார் அளித்தவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது தானே?. அவர் தானே எல்லாவற்றிற்கும் காரணம்?. ஒரு நபரை இத்தனை பேர் சேர்ந்து தாக்குவதற்கு என்ன காரணம்? முன் விரோதம் ஏதும் இருந்ததா? என அடுக்கடுக்கான கேள்வி எழுப்பினார்.

முன் விரோதம் எதுவும் இல்லை. டிஎஸ்பி விசாரிக்குமாறு கூறியதால் இவ்வாறு விசாரித்துள்ளனர்." என சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர் தரப்பில், "இந்த வழக்கில் வாக்குமூலம் அளித்தவர்கள், பிரபு என்ற போலீஸ்காரரைத் தவிர மற்றவர்கள் அடித்ததாகவே கூறியிருக்கின்றனர். அவருக்கு ஜாமீன் வழங்க வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு நீதிபதி, "வழக்கு முடியும் வரை யாராக இருந்தாலும் சிறையிலேயே இருக்கட்டும். மனம் பதறுகிறது. ஏதுமில்லாத விசயத்துக்கு ஒருவரை இப்படி அடித்திருக்கிறீர்கள். காவல் துறையினருக்கு பாடம் புகட்டுவோம்." என குறிப்பிட்டு விசாரணையை பிப்.17க்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

## 2.5 கோடி பேரின் ஆதார் எண்கள் முடக்கம்: மோசடியை தடுக்க நடவடிக்கை

புதுடில்லி: பிப்.5-

நாடு முழுவதும் இறந்து போன 2.5 கோடிக்கும் மேற்பட்டவர்களின் ஆதார் எண்கள் முடக்கப்பட்டு உள்ளதாக அதனை நிர்வகிக்கும் யுஐடிஏஐ அமைப்பு கூறியுள்ளது.

உலகளவில் மிகப்பெரிய பயோமெட்ரிக் அடையாள அமைப்பாக ஆதார் உள்ளது.நாடு முழுவதும் 134 கோடிபேரிடம் ஆதார் உள்ளது. வங்கிக்கணக்கு துவங்குவது முதல் பான் கார்டு பெறுவது வரையிலும், அரசின் நலத்திட்டங்களை பெறுவதற்கும் ஆதார் முக்கியமானதாக உள்ளது.

இந்நிலையில் ஆதார் பட்டியலின் துல்லியம் மற்றும் அதன் உண்மைத்தன்மையை உறுதி செய்வதற்காக நாடு முழுவதும் 2.5 கோடிக்கும் மேற்பட்டவர்களின் ஆதார் எண்கள் முடக்கப்பட்டு உள்ளதாக யுஐடிஏஐ தெரிவித்துள்ளது. இறந்தவர்களின் ஆதார் எண்கள் முடக்கப்பட்டு உள்ளதாக தெரிவித்துள்ள அந்த அமைப்பு, ஒருவர் இறந்தால் அவரின் ஆதார் எண்களை முடக்குவது அவசியம்.

இதன் மூலம் மோசடி நடப்பதை தடுக்கவும், அந்த எண்ணை பயன்படுத்தி அரசின் நலத்திட்டங்களை தவறான முறையில் கிடைப்பதை தடுக்க முடியும் எனத் தெரிவித்துள்ளது.





## பெரியகுளத்தில் திமுக மாவட்ட மருத்துவர் அணி சார்பில் இலவச மருத்துவ முகாம்

பெரியகுளம். பிப்.05

தேனி மாவட்டம் பெரியகுளம் விக்டோரியா நினைவு அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி வளாகத்தில் தேனி வடக்கு மாவட்ட திமுக மருத்துவரணி மற்றும் மதுரை அப்போலோ மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச மருத்துவ முகாம் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார்,தேனி வடக்கு மாவட்ட அவைத்தலைவர் செல்ல பாண்டியன் ஆகியோரது தலைமையிலும்,பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம் பாண்டியன்,பெரியகுளம் நகர் மன்ற தலைவர் சுமிதா சிவக்குமார் ஆகியோரது முன்னிலையிலும் நடைபெற்றது.முன்னதாக பெரியகுளம் நகர செயலாளர் முகமது இலியாஸ் வரவேற்று பேசினார்.முன்னாள் மாவட்ட செயலாளரும், தி.மு.க உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினருமான எல்.மூக்கையா,பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் முத்துராமலிங்கம் உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். இந்த இலவச மருத்துவ முகாமில் பொது மருத்துவம்,பொது அறுவை சிகிச்சை,இதய அறிவியல்,இரைப்பைக் குடல்,நுரையீரல்,நரம்பியல்,சிறுநீரகவியல்,இரத்த சர்க்கரை உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனை மற்றும் மருந்து மாத்திரைகள் வழங்கினர்.இந்த நிகழ்ச்சியில் தேனி வடக்கு மாவட்ட தி.மு.க மருத்துவர் அணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் திமுக நிர்வாகிகள்,தொண்டர்கள், செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.இந்த நிகழ்ச்சியை தேனி வடக்கு மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளரும்,திரவியம் கல்லூரி கல்வி குழுமத்தின் தாளாளருமான மருத்துவர் பாண்டியராஜ் ஏற்பாடு செய்திருந்தார்.முடிவில் மதுரை அப்பல்லோ மருத்துவமனை மேலாளர் பிரேம் டேனியல் நன்றி கூறினார்.

present sale for
all over Tamil Nadu
தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது



## சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம்

சிவகங்கை. பிப்.05

சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது...

சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி அமைப்பாளர் இடையமேலூர் வேல்முருகன் தலைமையிலும், வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை முத்துராமலிங்கம், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவாணி கணேசன் , ஒன்றிய துணை அமைப்பாளர்களான நாலுகோட்டை செல்வக்குமார் , கௌதம், நந்தகுமார் , கரண் ஆகியோரது முன்னிலையிலும் நடைபெற்றது...

இந்த கூட்டத்தில் தலைமைக்கழக இளைஞரணி பொறுப்பாளர் பிரசாத், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.எம்.மதிவாணன் ஆகியோர் கலந்து கொண்டு நடைபெறவிருக்கும் தென்மண்டல இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சிக்கான ஆலோசனைகளை வழங்கினர்...

இந்த கூட்டத்தில் மாவட்ட பிரதிநிதிகளான ஒக்கூர் லெ. சோமசுந்தரம், சோழபுரம் இரா. மாரி உள்ளிட்ட கிளைக்கழக இளைஞரணி நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## இளையான்குடி வடக்கு மற்றும் பேரூர் கழக இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம்

இளையான்குடி பிப். 05

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றிய பேரூர் திமுக மற்றும் இளைஞரணி கூட்டம் நடைபெற்றது! பேரூர் இளைஞரணி துணை அமைப்பாளர் இப்ராகிம் ஷா தலைமை தாங்கினார். ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் நாகராஜ், மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றியச்செயலர் , சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சுப.மதியரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

விருதுநகர் மாவட்டத்தில் நடைபெறும் தென்மண்டல இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொளவது பற்றிய ஆலோசிக்கப்பட்டது...

கூட்டத்தில் பேரூராட்சி துணைத்தலைவர் இப்றாகிம், ஜெயினுலாபுதீன், மாவட்டவிவசாய அணி பா.காளிமுத்து, ஒன்றிய கழக நிர்வாகிகள் பெரியசாமி, சிவனேசன், இராசேந்திரன், உதயசூரியன் சாரதி, தகவல் தொழில் நுட்ப அணி கண்ணன், மணிமொழியன், ராஜாசிங் மற்றும் பலர் கலந்துகொண்டனர். 7அன்று நடைபெறும் விருதுநகர் மாநாட்டில் திரளாகக் கலந்து கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

# பல்லாவரத்தில் திமுக சார்பில் திராவிட மாடல் நல்லாட்சியில் 5ஆம் ஆண்டு சாதனை விளக்கம் மற்றும் தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டம்






பல்லாவரம், பிப்.05-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி சார்பில் திராவிட மாடல் நல்லாட்சியில் 5ஆம் ஆண்டு சாதனை விளக்கம் மற்றும் தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டம் பல்லாவரம் பேருந்து நிலைய அருகில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தலைமையில் பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் ஏ கருணாநிதி வரவேற்பில் ஹலோ வடக்கு பகுதி கழகச் செயலாளரும் இரண்டாவது மண்டல் குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை பம்மல் வடக்கு பகுதி கழகச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார், பல்லாவரம் தெற்கு பகுதி கழக செயலாளர் இ.எஸ். பெர்னார்ட், செம்பாக்கம் வடக்கு பகுதி கழக செயலாளர் ஏ.கே. கருணாகரன், புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி.கே விவேகானந்தன் என்கின்ற ரவி முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கழக மருத்துவ அணி செயலாளர் மாநில திட்டக் குழு உறுப்பினர் எழிலன் நாகநாதன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு திமுக அரசின் சாதனைகளை விளக்கி பொதுமக்களுக்கு கொண்டு செல்லும் வகையில் சிறப்பு உரையாற்றினார்கள் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, துணை மேயர் காமராஜ், பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ரஃபி அகமது இரா. பொன்ராம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன் உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் அணியின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.





# சிவகங்கையில் பரபரப்பு: சுடுகாடு அமைக்க எதிர்ப்பு தெரிவித்து 10 கிராம மக்கள் மனித சங்கிலி போராட்டம்

சிவகங்கை, பிப்.05-

சிவகங்கை அருகே முத்துப்பட்டி ஊராட்சியில் அரசு சார்பில் சுடுகாடு அமைக்க எதிர்ப்பு தெரிவித்து, 10க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தங்கள் குழந்தைகளுடன் திரண்டு 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மனித சங்கிலி போராட்டத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சர்ச்சையின் பின்னணி

முத்துப்பட்டி ஊராட்சியில் மாவட்ட நிர்வாகம் சார்பில் கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய சமூகத்தினருக்காக 2 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, அங்கு சுடுகாடு அமைப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. இதற்கான ஆரம்பகட்டப் பணிகள்




தொடங்கிய நிலையில், அப்பகுதி மக்கள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

மக்களின் முக்கிய கோரிக்கைகள் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் முன்வைக்கும் முக்கிய காரணங்கள்:

* வழிபாட்டுத் தலம்: சுடுகாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் அருகிலேயே முனியாண்டி கோவில் அமைந்துள்ளது.

* முக்கிய போக்குவரத்து பாதை: பொன்னாகுளம், நயினா குளம், அரசனி முத்துப்பட்டி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராம மக்கள் சிவகங்கை நகருக்குச் செல்லப் பயன்படுத்தும் பிரதான சாலை இதுவாகும்.

* பாதுகாப்பு அச்சம்: இரவு நேரங்களில் பள்ளி குழந்தைகள் மற்றும் பெண்கள் அதிகளவில் நடமாடும் பகுதி என்பதால், இங்கு சுடுகாடு அமைப்பது பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தும் என அவர்கள் கருதுகின்றனர்.

போராட்டம் தீவிரம்

ஏற்கனவே கடந்த மாதம் இப்பகுதியில் துப்புரவுப் பணிகளை மேற்கொண்ட அதிகாரிகளை மக்கள் தடுத்து நிறுத்தி சாலை மறியலில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து நேற்று நடைபெற்ற சமாதானக் கூட்டத்திலும் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை. இதன் தொடர்ச்சியாக நேற்று முத்துப்பட்டி முதல் சிவகங்கை வரை சுமார் 2 கி.மீ தொலைவிற்கு 300க்கும் மேற்பட்டோர் மனித சங்கிலியாக நின்று பதாகைகளை ஏந்தி கோஷமிட்டனர்.

“அரசு உடனடியாக மாற்று இடத்தை ஒதுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஆதார் மற்றும் ரேஷன் அட்டைகளை அரசிடம் ஒப்படைத்துவிட்டு கிராமத்தை காலி செய்வோம். வரும் சட்டமன்றத் தேர்தலையும் முற்றிலுமாகப் புறக்கணிப்போம்,” என கிராம மக்கள் சார்பில் பாபு தெரிவித்தார்.

போராட்டத்தின் போது அசம்பாவிதங்கள் ஏதும் நடக்காமல் இருக்க ஏராளமான காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். பொதுமக்களின் இந்தத் தீவிர முடிவால் சிவகங்கை பகுதியில் பதற்றமான சூழல் நிலவுகிறது.



# தாம்பரத்தில் பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு தேமுதிக சார்பில் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

தாம்பரம், பிப்.05-

பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு தேமுதிக சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தாம்பரம் மாநகர மேற்கு பகுதி தேமுதிக சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு பகுதி செயலாளர் மார்கெட் ஞானபால் அவர்கள் தலைமை, பொருளாளர் ஜார்ஜ் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் மத்திய பகுதி செயலாளர் ஆனந்தன், மாவட்ட மகளீர் அணி செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா, மேற்கு பகுதி நிர்வாகி தர்மா ஐயப்பன், கவின்குமார், 49, வது வட்ட செயலாளர் கிரி, தெற்கு பகுதி துணை செயலாளர் ஏழுமலை,33 வட்ட செயலாளர் கோபால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு மரியாதை செலுத்தினர்



# பட்ஜெட்டில் புறக்கணித்தவர்களை தேர்தலில் புறக்கணிப்போம்: அமைச்சர் மெய்யநாதன் பேச்சு

புதுக்கோட்டை, பிப்.05-

புதுக்கோட்டையில் திமுக சார்பில் ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பொதுக்கூட்டம் வடக்கு மாவட்ட செயலாளர் செல்லபாண்டியன் தலைமையில் நேற்று நடந்தது. அமைச்சர் மெய்யநாதன், முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், எம்எல்ஏ முத்துராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில், அமைச்சர் மெய்யநாதன் பேசியது:‘ஒன்றிய பாஜ அரசின் பட்ஜெட்டில் ‘திருக்குறளும் இல்லை’, ‘தமிழ்நாட்டிற்கு நிதியும் இல்லை’. இது மிகப்பெரிய ஏமாற்றம். நிதி இல்லாமல் மாநிலத்தை எப்படி நடத்துவது.

தமிழ்நாட்டிற்கு நிதி தராமல் புறக்கணிப்பவர்களை, தேர்தலில் நாம் புறக்கணிக்க வேண்டும். தமிழ்நாட்டில் நடைபெறுவது வெறும் ஆட்சி அல்ல ஏழைகளின் அரண், தமிழர்களின் அடையாளம். வரும் தேர்தல் ஜனநாயகத்திற்கும், சமூகநீதிக்கும் சவால் விடக்கூடிய தேர்தல். இந்த தேர்தலில் முதல்வர் மு.க.ஸ்டாலினை மீண்டும் முதல்வராக்க அனைவரும் உறுதியேற்க வேண்டும்’ என்றார்.





அறநிலை துறை சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு

# தாம்பரம் அருள்மிகு செல்வ விநாயகர், கோதண்டராமர் திரிக்கோயிலில் சிறப்பு வழிபாடு, பொது விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது

தாம்பரம், பிப்.05-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் அறநிலை துறை சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் ஜி.எஸ்.டி சாலையில் உள்ள அருள்மிகு செல்வ விநாயகர், கோதண்டராமர் திருக்கோயிலில் சிறப்பு வழிபாடு, பொதுவிருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக தொழில்துறை நல மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன், தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு பூஜை செய்து பொது விருந்து நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர் 500 க்கும் மேற்பட்டவர்கள் பொது விருந்தில் கலந்து கொண்டு உணவருந்தினர் இதனை தொடர்ந்து ஏழை, எளிய மக்களுக்கு 300க்கும் மேற்பட்டோருக்கு நலதிட்ட உதவிகள் சேலைகள் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் மண்டல குழுத் தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், தாம்பரம் மாநகர விளையாட்டு அணி அமைப்பாளர் எஸ்.ஜி.கருணாகரன், பகுதி துணை செயலாளர் எஸ்.வேலுமணி, மாமன்ற உறுப்பினர் ரமணி ஆதிமூலம், அரசு அதிகாரிகள் தக்கார் கார்த்திகேயன், செயல் அலுவலர் சரவணகுமார், எழுத்தர் ரமேஷ், மாமன்ற உறுப்பினர்கள் அணியில் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேனியில் 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் 2வது நாளாக சாலை மறியல் போராட்டம்

தேனி, பிப்.05-

தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி சங்கத்தின் கூட்டமைப்பு சார்பில் 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் தேனி மாவட்டத்தில் கூட்டமைப்பு சார்பில் தேனி நேரு சிலை பகுதியில் கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று 2வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர் .

இந்த போராட்டத்தில் தமிழ்நாடு அரசு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து வழங்க வேண்டும்.

சத்துணவு, அங்கன்வாடி மற்றும் வருவாய், கிராம நிர்வாக அலுவலக உதவியாளர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியமாக 7,850 ரூபாய் வழங்க வேண்டும்.

70 வயது பூர்த்தியான ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதலாக 10% ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்பன உள்பட 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பி சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத்தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 500க்கும் மேற்பட்ட அங்கன்வாடி பணியாளர்களை போலீசார் கைது செய்து திருமண மண்டபத்தில் அடைத்தனர். சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் நடத்திய இந்த போராட்டத்தில் தேனி கம்பம் நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# அகசிப்பள்ளி ஊராட்சியில் மாரியம்மன் கோவில் பணிகளை சட்டமன்ற உறுப்பினர் அசோக் குமார் நேரில் ஆய்வு - பொதுமக்கள் கோரிக்கைகளுக்கு உறுதி

கிருஷ்ணகிரி, பிப்.05-

கிருஷ்ணகிரி மாவட்டம் அகசிப்பள்ளி ஊராட்சி ராயக்கோட்டையான் கொட்டாய் பகுதியில் கட்டப்பட்டு வரும் மாரியம்மன் கோவிலை சட்டமன்ற உறுப்பினர் திரு. அசோக் குமார் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். கோவில் கட்டுமான பணிகள் எவ்வாறு நடைபெற்று வருகின்றன என்பதை கேட்டறிந்ததுடன், அப்பகுதி மக்களின் குறைகளை கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து அப்பகுதி பொதுமக்களுடன் கலந்துரையாடிய சட்டமன்ற உறுப்பினர், அவர்களின் அடிப்படை தேவைகள் மற்றும் குறைகளை நேரடியாக கேட்டறிந்தார். அப்போது பொதுமக்கள், மாரியம்மன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள புதூர் ஏரி மழைக்காலங்களில் நிரம்பி, அதன் நீர் தேசிய நெடுஞ்சாலை வரை



பெருக்கெடுத்து ஓடுவதால் போக்குவரத்துக்கும், பொதுமக்களின் பாதுகாப்புக்கும் பாதிப்பு ஏற்படுகிறது என தெரிவித்தனர். குறிப்பாக ஏரியின் கரைகள் பலவீனமாக இருப்பதால் அரிப்பு ஏற்பட்டு, சுற்றுப்பகுதிகளில் சிரமம் உருவாகி வருவதாகவும் எடுத்துரைத்தனர்.

இதனை கருத்தில் கொண்டு, புதூர் ஏரியின் கரைகளை பலப்படுத்தி, ஏரியை ஒட்டிய பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்து தர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கையை கவனமாக கேட்டறிந்த சட்டமன்ற உறுப்பினர் அசோக் குமார் அவர்கள், உரிய துறைகளுடன் ஆலோசனை மேற்கொண்டு, தகுந்த நேரத்தில் ஏரியின் கரைகள் உறுதிப்படுத்தப்பட்டு, சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தார்.

சட்டமன்ற உறுப்பினர் வழங்கிய இந்த உறுதியால் மகிழ்ச்சி அடைந்த அப்பகுதி பொதுமக்கள், அவருக்கு மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொண்டனர். இந்த நிகழ்வின்போதுகிழக்கு ஒன்றிய செயலாளர் கன்னியப்பன், மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி ஆஜி, அம்மா பேரவை மாவட்ட இணைச் செயலாளர் தாபா வெங்கட்ராமன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நாராயணன்,

அம்மா பேரவை துணைச் செயலாளர் ரமேஷ், இளைஞர் அணி ஒன்றிய செயலாளர் ரமேஷ், சின்னசாமி, கோபி, மாது, திம்மராயன், குமார், கோவிந்தன், சின்ன கவுண்டர், காவேரி, கதிரேசன், முருகன், மந்திரி கோவிந்தசாமி, விக்ரம், மந்திரி திருப்பதி ஊராட்சி பிரதிநிதிகள், கோவில் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



தீய சக்திகளை அகற்றி 2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற வேண்டி

# தைப்பூசம் திருநாளை முன்னிட்டு அனகாபுத்தூர் முருகன் கோவிலில் பூ காவடி எடுத்து மண் சோறு சாப்பிட்ட மாவட்ட நிர்வாகி

பல்லாவரம், பிப்.05-

செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் மாவட்ட இணை செயலாளர் அனகை க.மதன்குமார் தமிழகத்தில் தீய சக்திகளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் வெற்றி பெற்று சென்ட் ஜார்ஜ் கோட்டையில் அமர வேண்டி தைப்பூசம் திருநாளில் அனகாபுத்தூரில் உள்ள முருகன் கோவிலில் பூ காவடி எடுத்து சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டனர், அதனைத் தொடர்ந்து மண் சோறு சாப்பிட்டு இறைவனிடம் தீவிர பிரார்த்தனையில் ஈடுபட்டனர்,

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட இணை செயலாளர் மதன் குமார் கூறுகையில் தமிழகத்தில் இருக்கக்கூடிய தீய சக்திகளை அகற்றி 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தலைவர் விஜய் வெற்றி பெற்று சென்ட் ஜார்ஜ் கோட்டையில் அமர எங்களை பிரார்த்தனையை செய்து வருகிறோம் மேலும் தைப்பூசம் நாளில் இறைவனிடம் வேண்டிக் கொண்டு செய்யக்கூடிய பிரார்த்தனைகள் அனைத்தும் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் செய்து வருகிறோம் என்றும் கூறினார் உடன் நிகழ்ச்சியில் அனகாபுத்தூர் பகுதி கழக செயலாளர் மதன் மற்றும் அனகாபுத்தூர் பகுதி தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



# பையூர் கிராமத்தில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி

கிருஷ்ணகிரி, பிப்.05-

காவேரிப்பட்டணம் அடுத்த பையூர் கிராமத்தில், போதைப்பொருள் இல்லா சமூகத்தை உருவாக்கும் நோக்கில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இந்த பேரணியை வாழவச்சனூர் அரசு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள், நடுப்பையூர் அரசு மேல்நிலைப் பள்ளியுடன் இணைந்து ஒருங்கிணைத்து நடத்தினர்.

பேரணியில் பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு, போதைப்பொருள் பழக்கத்தின் தீமைகள் குறித்து பொதுமக்களிடம் எடுத்துரைத்தனர். "போதை வேண்டாம் ஸ்ரீ வாழ்க்கை வேண்டும்", "இளைஞர்களே விழிப்போம்" போன்ற முழக்கங்களை எழுப்பியபடி, பதாகைகளை ஏந்தி பையூர் கிராமத்தின் முக்கிய வீதிகள் வழியாக பேரணி நடைபெற்றது.

போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் உடல் நல பாதிப்புகள், மன அழுத்தம், குடும்ப மற்றும் சமூக சீர்கேடுகள் குறித்து பொதுமக்களிடம் விரிவாக விளக்கப்பட்டது. குறிப்பாக இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் போதைப்பொருளில் இருந்து விலகி கல்வி, விளையாட்டு மற்றும் சமூக நல செயல்பாடுகளில் ஈடுபட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இந்த விழிப்புணர்வு பேரணியை பரணீஸ்வர், பிஸ்வஜித் மண்டல், அச்சந்திரு ஃபைசல், கோகுல்ராஜ், கவுதம் கம்பீர், ஹரிஹரன், ஹரிஷ், ஐயப்பன், ஜான் பிரபாகர் கார்த்திக், கவின், குமணவல்லல், லட்சுமணன், மார்டின் ஸ்டீவர்ட், மெல்வின் பால், முகம்மது அர்ஷத் ரஹ்மான், மௌலிஷ், நவீன், நூர் முகம்மது, பிரசாத், பிரியதர்ஷன், புகழ், ரேபுடி சூர்யபிரகாஷ் உள்ளிட்ட வாழவச்சனூர் அரசு வேளாண்மை கல்லூரி மாணவர்கள் ஒருங்கிணைத்தனர்.

மாணவர்களின் சுறுசுறுப்பான பங்கேற்பு மற்றும் முழக்கங்கள் கிராம மக்களிடையே பெரும் கவனத்தை ஈர்த்ததுடன், போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க இந்த நிகழ்வு முக்கிய பங்காற்றியது.

# கிருஷ்ணகிரியில் BKPM (பெரிய முனுசாமி கவுண்டர்) சாலை - அமைச்சர் சக்கரபாணி பெயர் பலகை திறப்பு




கிருஷ்ணகிரி, பிப்.05-

தர்மபுரி- கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த மாவட்டமாக இருந்த காலகட்டத்தில் கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, அரூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தி, மக்கள் சேவையில் தனித்த முத்திரை பதித்த மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் B.K. பெரிய முனுசாமி கவுண்டர் அவர்களின் சமூக சேவையைப் போற்றும் வகையில், அவரது பெயரில் கிருஷ்ணகிரியில் BKPM சாலை என பெயரிட தமிழக அரசு அறிவித்தது.

இதனையடுத்து, கிருஷ்ணகிரி நகராட்சிக் குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள BKPM சாலை பெயர் பலகை திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இவ்விழாவில் தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் மாண்புமிகு அர. சக்கரபாணி அவர்கள் கலந்து கொண்டு, பெயர் பலகையை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் திரு. தினேஷ் குமார், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தே. மதியழகன், கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. கோபிநாத் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

மேலும், ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஜுவெல்லரி - டெக்ஸ்டைல்ஸ் நிறுவன உரிமையாளர் திரு. ரமேஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. செங்குட்டுவன், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் திரு. சதீஷ்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

அத்துடன், B.K. பெரிய முனுசாமி கவுண்டர் அவர்களின் மகன்கள் ராஜேந்திரவர்மா, போஜராஜ வர்மா மற்றும் குடும்பத்தினர், கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி, கடலரசு மூர்த்தி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

மறைந்த B.K. பெரிய முனுசாமி கவுண்டர் அவர்களின் மக்கள் சேவை என்றும் நினைவுகூரப்படும் வகையில், அவரது பெயரில் சாலை அமைக்கப்பட்டிருப்பது இளைஞர்களுக்கு ஊக்கமாக அமையும் என நிகழ்ச்சியில் பேசியவர்கள் தெரிவித்தனர்.

# "யார் துரோகி... யார் எதிரி என்று மக்களுக்குத் தெரியும்" விடுகதை போடும் சசிகலா



சென்னை, பிப்.05-

அண்ணா நினைவு நாளையொட்டி மெரினாவில் உள்ள அண்ணா நினைவிடத்தில் மரியாதை செய்த வி.கே. சசிகலா, "யார் துரோகி... யார் எதிரி என்பதை மக்களின் கருத்துக்கே விட்டுவிடுகிறேன். மக்களுக்கு அது நன்றாகவே தெரியும்" என்று தெரிவித்தார்.

இதுதொடர்பாக அண்ணா நினைவிடத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: மத்திய அரசு தாக்கல் செய்த பட்ஜெட்டில் தமிழகத்துக்கு என பெரிதாக எதுவும் இடம்பெறவில்லை. பணிபுரியும் பெண்களுக்கான தங்கும் விடுதிகள் ஏற்கெனவே 2013ம் ஆண்டு, மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சியில் கொண்டுவரப்பட்டது தான். இதை தற்போது நாடு முழுவதும் செய்யப் போவதாக மத்திய அரசு அறிவித்திருப்பது வரவேற்கத் தக்கது. அதேசமயம் மாத ஊதியம் பெறுவோருக்கான வருமான வரி விகிதாச்சாரத்தில் எந்தவித மாற்றமும் இல்லை என்பது பெரிய ஏமாற்றம்.

இன்றைக்கு நான் ஏற்ற உறுதிமொழியில், "எனது தலைமையில் துரோகிகளுக்கும், எதிரிகளுக்கும் நாங்கள் பாடம் கற்பிப்போம். என் தலைமையில் தேர்தலை சந்திக்க இருக்கிறோம்" என்ற வாசகங்கள் இடம்பெற்றிருப்பது உண்மை தான். இதில் யார் துரோகி... யார் எதிரி என்பதை மக்களின் கருத்துக்கே விட்டுவிடுகிறேன். மக்களுக்கு அது நன்றாகவே தெரியும். இதை விவரித்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அதேபோல் தேர்தல் களத்தில் எங்களுடைய எம்ஜிஆர் ஜெயலலிதா தொண்டர்கள் இருப்பார்கள். அது எப்படி, என்ன என்பதை விரைவில் அனைவரும் தெரிந்துகொள்வார்கள்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் அமமுக இணைந்திருக்கிறது. ஒவ்வொரு கட்சியும் அவர்களுக்கு எது சரி எனப் படுகிறதோ, அந்தந்த கட்சியோடு கூட்டணி அமைக்கிறார்கள். அதில் நான் தலையிட்டு எதுவும் சொல்ல முடியாது. என்னைப் பொறுத்தவரை எம்ஜிஆர் ஜெயலலிதா வழியில் ஆட்சி நடக்க வேண்டும்.

அதேபோல் தவெக தலைவர் விஜய்யும் அதிமுகவை ஊழல் கட்சி என்று விமர்சித்திருக்கிறார். ஒவ்வொருத்தருக்கும் ஒரு எண்ணம் இருக்கும். ஜெயலலிதா இருந்தபோது அரசாங்கம் எப்படி இருந்தது என்பதை நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு மிகவும் மோசமாக இருக்கிறது. இதற்கு திமுக பதில் சொல்லி ஆகவேண்டும். தமிழகத்தில் எம்ஜிஆர் ஜெயலலிதா வழியில் மக்களாட்சியை கொண்டு வருவதற்கு, எனது 39 ஆண்டு அனுபவத்தை வைத்து என்னால் என்ன செய்யமுடியுமோ அதைச் செய்வேன். இவ்வாறு அவர் கூறினார்.



# உங்களுடன் ஸ்டாலின் திட்டம் - 10,000 முகாம்கள்: கிருஷ்ணகிரியில் 3,128 பயனாளிகளுக்கு ரூ.71.29 லட்சம் நலத்திட்ட உதவிகள், அமைச்சர் சக்கரபாணி வழங்கினார்

கிருஷ்ணகிரி, பிப்.05-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நேற்று (04.02.2026) விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டம் கொள்ளார் கிராமத்தில் அமைந்துள்ள சிப்காட் வளாகத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக, உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடைபெறும் 10,000 முகாம்கள் மூலம் வழங்கப்படும் நலத்திட்டப் பயன்கள் மற்றும் 1.80 இலட்சம் புதிய பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்டப் பயன்களை வழங்கி திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் - 10,000 முகாம்கள் நலத்திட்டப் பயன்கள் வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் தமிழக உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அவர்கள் கலந்து கொண்டு, 3,128 பயனாளிகளுக்கு ரூ.71 இலட்சத்து 29 ஆயிரத்து 279 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் ச. தினேஷ் குமார்,கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கே. கோபிநாத், ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

மேலும், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அபிநயா, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செங்குட்டுவன், திமுக மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர்கள் சீனிவாசன், அன்பரசு, மாநில விவசாய அணி வெங்கடேசன், நகரப் பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் மூலம் அரசின் சேவைகள் மக்களின் வாசல்தோறும் சென்று சேர்வதாகவும், சமூக பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுவதாகவும் விழாவில் பேசியவர்கள் தெரிவித்தனர். இந்த திட்டம் மக்கள் நல அரசின் அடையாளமாக விளங்குகிறது என்றும் அவர்கள் கூறினர்.

# குமரகிரி மலையில் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சண்முகநாதர் திருக்கோவிலில் திருக்கல்யாண வைபோக விழா - திரளான கிராம மக்கள் பக்தி பரவசம்



கிருஷ்ணகிரி, பிப்05-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் அருகே செட்டிமாரன்பட்டி கிருஷ்ணன் கொட்டாய் கிராமத்தில் எழுந்தருளியுள்ள குமரகிரி மலையில் அமைந்துள்ள ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சண்முகநாதர் திருக்கோவிலில் 2ம் ஆண்டு தைப்பூசத் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

கடந்த 26ம் தேதி கொடி ஏற்றத்துடன் துவங்கிய இத்திருவிழா, தினந்தோறும் சிறப்பு பூஜைகள் மற்றும் ஆன்மிக நிகழ்ச்சிகளுடன் நடைபெற்று வந்தது. இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக, ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சண்முகநாதர் சுவாமிக்கு திருக்கல்யாண வைபோகம் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.

திருக்கல்யாண வைபோகத்தை முன்னிட்டு செட்டிமாரன்பட்டி, கிருஷ்ணன் கொட்டாய் உள்ளிட்ட சுற்றுவட்டார பல்வேறு கிராமங்களில் இருந்து ஏராளமான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள், அரிசி, பருப்பு, வாழைத்தார், சேவல் கோழி உள்ளிட்ட பல்வேறு சீர்வரிசைப் பொருள்களுடன் மேளத்தாளங்கள் முழங்க, ஊர்வலமாக திருக்கோவிலுக்கு வந்து கொலு மண்டபத்தில் நடைபெற்ற திருக்கல்யாண விழாவில் பக்தியுடன் கலந்து கொண்டனர். மணமக்களான ஸ்ரீ வள்ளி, தேவசேனா சமேத சண்முகநாதர் சுவாமிக்கு சீர்வரிசைத் தட்டுகளை சமர்ப்பித்து வழிபட்டனர்.

பின்னர் கொலு மண்டபத்தில் திருக்கல்யாண அலங்காரத்தில் காட்சியளித்த சுவாமி சண்முகநாதருக்கு, கிராம மக்கள் முன்னிலையில் திருக்கல்யாண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. தொடர்ந்து பூநூல் கட்டுதல், மாலை மாற்றுதல் உள்ளிட்ட பாரம்பரிய திருமண சடங்குகள் சிறப்பாக நடத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து அக்னிசாட்சியுடன், மங்கள வாத்தியங்கள் முழங்க, சுவாமி சண்முகநாதர் ஸ்ரீ வள்ளி மற்றும் தேவசேனாவுக்கு தாலி கட்டும் வைபோகம் பக்தர்களின் "அரோகரா" முழக்கத்துடன் நடைபெற்றது.

திருக்கல்யாணத்திற்குப் பின்னர் மணக்கோலத்தில் காட்சியளித்த ஸ்ரீ வள்ளி, தேவசேனா சமேத சண்முகநாதர் சுவாமியை கிராம மக்கள் நீண்ட வரிசையில் தரிசனம் செய்து வழிபட்டனர். இவ்விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவரும் ஆன்மிக பரவசத்தில் திளைத்தனர்.

திருமண விழாவைத் தொடர்ந்து, திருக்கல்யாண வைபோக விழாவிற்கு வருகை தந்து சுவாமி சண்முகநாதரை வழிபட்ட அனைத்து பக்தர்களுக்கும் திருமண விருந்து வழங்கப்பட்டது. இந்த விருந்தினை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் முன்னாள் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழு உறுப்பினருமான எல். சுப்பிரமணியன் அவர்கள் ஏற்பாடு செய்து சிறப்பித்தார்.

இந்த திருவிழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செட்டிமாரன்பட்டி மற்றும் கிருஷ்ணன் கொட்டாய் கிராமத்தைச் சேர்ந்த ஊர் கவுண்டர்கள் மற்றும் கிராம மக்கள் ஒருங்கிணைந்து சிறப்பாக செய்திருந்தனர். விழா அமைதியாகவும், ஆன்மிகச் சூழலுடனும் நடைபெற்று, பக்தர்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

# 'ஊழல் சக்தி' என்று விஜய் யாரைக் குறிப்பிடுகிறார்: இபிஎஸ் எதிர்வினை



சென்னை, பிப்.05-

"ஜெயலலிதாவை ரோல் மாடல் என விஜய் ஏற்றுக்கொண்டார். அதனால், எங்களை ஊழல் சக்தி என்று கூற வழியே இல்லை. அப்படியென்றால் அவர் யாரை அப்படிக் குறிப்பிடுகிறார்?" என தவெக தலைவர் விஜய்க்கு எடப்பாடி பழனிசாமி எதிர்வினையாற்றியுள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "அதிமுக பொன்விழா கண்ட கட்சி. 31 ஆண்டுகாலம் ஆட்சி புரிந்த கட்சி. மக்களுக்கு நன்மை தரக்கூடிய திட்டங்களை அறிவித்துள்ளோம். நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளோம். எங்கள் கூட்டணி தான் பலமான கூட்டணி.

விஜய் மக்களையும் நேரில் பார்ப்பது இல்லை. தொலைக்காட்சியை பார்த்தும் தெரிந்து கொள்வதில்லை. விஜய்க்கு களத்தில் உள்ள நிலவரம் தெரியவே இல்லை. கரூரில் 41 பேர் உயிரிழந்ததும் 72 நாட்களாக வீட்டை விட்டு வெளியே வராதவர் விஜய்.

அதிமுக தலைமையில் தான் கூட்டணி என அமித்ஷாவே சொல்லிவிட்டார்; இது கூட தெரியாதவராக விஜய் உள்ளார். வீட்டை விட்டு வெளியே வந்தால் விஜய்க்கு நாட்டு நடப்பு தெரியும். ஒரு முறையாவது பிரஸ் மீட் வந்திருக்கிறாரா?. ஜெயலலிதாவை ரோல் மாடல் என அவர் ஏற்றுக்கொண்டார். எங்களை ஊழல் சக்தி எனக் கூற வழியே இல்லை.

அதிமுகவில் இருந்து தவெகவுக்கு சென்ற ஒருவர் (செங்கோட்டையன்), அவர் பெயரை கூற விரும்பவில்லை. ஊழல் குற்றச்சாட்டில் சிறைக்குச் சென்றவர். அவர்தான் விஜய் உடன் தற்போது இருக்கிறார்.

அப்படியிருக்க விஜய் யாரை 'தீய சக்தி', 'ஊழல் சக்தி' எனச் சொல்கிறார். அதைக் குறிபிட்டு சொன்னால் தான் அது குறித்துப் பேச முடியும். விஜய் நாட்டு நடப்பு தெரியாமல் அறியாமையில் பேசி வருகிறார்.

திறமையற்ற பொம்மை முதல்வர்தான் ஸ்டாலின். அவர் திமுகவின் தலைவராக இருப்பதே வேதனைதான்". என்றார்.



■ சிவகங்கை மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உலக ஈரநிலங்கள் தினத்தை முன்னிட்டு ஈரநிலங்கள் குறித்து பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் மாவட்ட வன அலுவலர் ராஜேஸ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மகாராஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்..



■ வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் கூட்டரங்கில் குடியாத்தம் வட்டம் தாழையாத்தம் கிராமம் ஜோகி நகரில் கப்ராஸ்தான் சுற்று சுவர் அமைக்க ரூ.39.00 இலட்சம் மதிப்பிலான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி, குடியாத்தம் நகராட்சி ஆணையாளர் சுரேஷ்குமார் அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன் மாவட்ட பிற்படுத்தபட்டோர் நலத்துறை நல அலுவலர் ஜெயசித்ரா வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.



■ தேனிமாவட்டம் கம்பத்தில் அஇஅதிமுக சார்பாக பேரறிஞர் அண்ணாவின் 57வது நினைவுதினம் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மேற்கு மாவட்டசெயலாளர் STK ஜக்கையன் EXMLA கழக அமைப்பு செயலாளர் தலைமை தாங்கினார். மேலும் வடக்குநகர செயலாளர் கார்த்திகேயன் EXM.C மற்றும் தெற்கு நகர செயலாளர் கணபதி முன்னிலை வகித்தனர். உடன் கம்பம் வடக்கு, தெற்கு நகர நிர்வாகிகள், சார்பணி, கிளை கழக செயலாளர்கள் மற்றும் கழக தொண்டர்கள் திரளாக கழந்து கொண்டனர்.




# புளியம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டி வழங்கல் - மதியழகன் எம்.எல்.ஏ. வழங்கினார்

கிருஷ்ணகிரி, பிப்.05-

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட புளியம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் சார்பில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு ஒன்றிய செயலாளர் சாந்தமூர்த்தி தலைமை தாங்கினார். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சசிகலா அர்ஜுனன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர், கவுன்சிலர் அம்மன் ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பிடிஏ தலைவர் சிவசங்கர் வரவேற்புரை ஆற்றினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற சட்டமன்ற உறுப்பினர் மதியழகன், மாணவர்களுக்கு விலை யில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

இதில் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சரவணன், மாவட்ட துணை செயலாளர் நாகராஜ், பேரூராட்சி தலைவர் தம்பிதுரை, மணிவண்ணன், கலைதேவி உள்ளிட்டோர், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் தலைமை ஆசிரியர் துரைராஜ் நன்றியுரை வழங்கினார்.




■ மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் V.செந்தில்பாலாஜி மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் உலக மாற்றுத்திறனாளிகள் தினம் 2025யை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.






# காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் நடுநிலைப் பள்ளியில் மகிழ்முற்றம் நிகழ்ச்சி

காளையார் கோவில், பிப்.05-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி சேம்பாரில் மகிழ் முற்றம் நிகழ்ச்சி தலைமை ஆசிரியர் சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. ஒவ்வொரு மாதமும் அணிகளின் செயல்பாடுகளுக்கு வழங்கப்படும் மதிப்பெண் அடிப்படையில் , வெற்றி பெற்ற அணிக்கு ஊக்க பரிசுகள் வழங்கப்படுகிறது. ஜனவரி மாதத்திற்கான செயல்பாடுகளான மாணவர்கள் வருகை, கற்றல் திறன், மன்ற செயல்பாடுகள், குடியரசுத் தின விழா , வானவில்



மன்ற செயல்பாடுகள், சமத்துவ பொங்கல் விழா போட்டிகள் போன்றவற்றிற்கு ஒவ்வொரு அணியினருக்கும் தனித்தனியாக மதிப்பெண் வழங்கப்பட்டது. முல்லை அணி முதலிடத்தையும் மருதம், நெய்தல் அணிகள் இரண்டாம் இடமும், மூன்றாம், மற்றும் நான்காம் இடங்கள் முறையே , குறிஞ்சி, மற்றும் பாலை ,அணிகள் பெற்றன. முதலிடம் பெற்ற முல்லை அணிக்கு சுழற் கோப்பையும் ஊக்கப் பரிசு வழங்கப்பட்டது. மேலும் தலைமை ஆசிரியர் சுரேஷ், மகிழ் முற்றத்தின் நோக்கங்களான கற்றல் திறன் களை மேம்படுத்துதல், அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை ஊக்குவித்தல், அனைத்து மாணவர்களுக்கும் சம வாய்ப்புகள் அளித்தல்,தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல், மற்றும் ஆசிரியர் மாணவர் உறவுகளை வலுப்படுத்துதல் போன்றவற்றை எடுத்துரைத்தார். ஜனவரி மாதத்தில் முதலிடம் பிடித்த முல்லை அணியின் தலைவர் ஜஸ்மிதா கொடியேற்றி சிறப்புரையாற்றினார். அணியின் தலைவர் ஜஸ்மிதா துணைத் தலைவர் கனிஷ்காமற்றும் பொறுப்பாசிரியர் தனபாக்கியம் இருவரும் சுழற் கோப்பையை பெற்றுக் கொண்டனர். பட்டதாரி ஆசிரியர் காளீஸ்வரன் நன்றியுரை கூறினார். ஆசிரியர்கள் காளீஸ்வரன்,முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதிமலர் மற்றும் தனபாக்கியம் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், சத்துணவு பொறுப்பாளர்கள், காலை சிற்றுண்டி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



■ வேலூர் மாநகராட்சி சார்பில் தூய்மை பணியாளர்களின் குழந்தைகளுக்கு வழிகாட்டு நிகழ்ச்சி காட்பாடியில் தனியார் மண்டபத்தில் நடந்தது. அதில் கலந்துகொண்ட முன்னாள் தலைமை செயலாளர் இறையன்புக்கு புத்தகம் வழங்கிய மாநகராட்சி சுகாதார அலுவலர் சிவக்குமார், அருகில் நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தலைமை தாங்கினார்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த கண்காணிப்பு அலுவலர் இரா.லலிதா, சட்டமன்ற தொகுதி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் ஆகியோருடன் கலந்தாய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர், மாவட்ட உதவி தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.










# பள்ளி மாணவிகளிடம் அநாகரீக நடத்தை: சென்னை திருப்பதி நெடுஞ்சாலையில் மாணவிகள் சாலை மறியல்

கனகம்மாசத்திரம், பிப்.05-

திருவள்ளூர் மாவட்டம் கனகம்மாசத்திரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவிகளிடம், கஞ்சா போதையில் இருந்த கும்பல் தகாத முறையில் நடந்துகொண்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனை கண்டித்து மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் சாலை மறியல் மற்றும் காவல் நிலைய முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவம் குறித்து கூறப்படுவதாவது:

கனகம்மாசத்திரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவிகள் சிலர், பள்ளி முடிந்து வீடு திரும்புவதற்காக பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த கஞ்சா போதையிலிருந்த சில இளைஞர்கள், மாணவிகளிடம் அநாகரீகமான முறையில் பேசி, தகாத முறையில் நடந்துகொண்டதாகக் கூறப்படுகிறது.

சாலை மறியல்:

போதை ஆசாமிகளின் இந்த அநாகரீக செயலால் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்த மாணவிகள், உடனடியாக சென்னை திருப்பதி தேசிய நெடுஞ் சாலையில் திரண்டு சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

பெற்றோர்கள் முற்றுகை:

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மாணவிகளின் பெற்றோர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள், மாணவிகளுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் குதித்தனர். பின்னர், அனைவரும் திரண்டு கனகம்மாசத்திரம் காவல் நிலையத்தை முற்றுகை யிட்டனர். “மாணவிகளுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது; கஞ்சா போதையில் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களை உடனடியாகக் கைது செய்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்“ என வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

இச்சம்பவம் குறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து, தலைமறைவாக உள்ள போதை ஆசாமிகளைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர். பள்ளி மாணவிகள் சாலை மறியலில் ஈடுபட்ட சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவம் குறித்து கனகம்மா சத்திரம் பகுதியை சேர்ந்த நான்கு நபர்களை கனகம்மா சத்திரம் போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161